

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம். அன்பழகன், மங்கை எம்.சங்கர், எம். அப்துல்மாலிக் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், இறச்சகுளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய செயலாளர் த.செல்வன் தலைமையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம், ஒன்றிய அவைத் தலைவர் சொ.சீனிவாசன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.என்.சங்கர் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், BLA2 மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கத்தை, கத்தையாக பணத்தை எண்ணும் த.வெ.க. வேட்பாளர்!

## வீடியோ பாடலுடன் வைரல்!

விழுப்புரம், மே 24 -

விழுப்புரம் த.வெ.க. மாவட்டச் செயலாளர் கட்டை பையில் கத்தை கத்தையாக தேர்தலுக்கு பணம் வாங்கியதாகவும், அவர் முன்பாக இந்த பணத்தை எண்ணுவது போல் வீடியோ ஒன்று வைரலாகி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி அமைத்துள்ள த.வெ.க. நிர்வாகிகள் பல்வேறு மாவட்டங்களில் அட்ராசிட்டியிலும், அரசு அலுவலகங்களில் அத்துமீறலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே விழுப்புரம் மாவட்டத்தில் அரசுப் பதவிகளுக்கு பேரம் பேசி பணத்தை வசூலிப்பதாக த.வெ.க. மாவட்டச் செயலாளர் குஷிமோகன் மீது புகார்கள் குவிந்து வருகிறது.

இந்நிலையில் தவெக மாவட்ட செயலாளர் குஷி மோகன் முன்பு ஒரு கட்டை பையில் கத்தை, கத்தையாக பணம் எண்ணும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் சோபாவில் த.வெ.க. மாவட்டச் செயலாளர் குஷிமோகன் உட்கார்ந்திருப்பது, அவருக்கு முன்னால் ஒரு கட்டைப்பையில் கத்தை, கத்தையாக 500 ரூபாய் நோட்டு பண்டல்கள் அடுக்கிவைத்து எண்ணப்பட்டு வருகின்றன. இந்த வீடியோவிற்கு மாட்டிக்கினாரு, மாட்டிக்கினாரு ஒருத்தரு என்று பாடலை போட்டும், ரூ.50 லட்சம், ரூ.20 லட்சம் வசூல் என்று பதிவிடப்பட்டு சமூகவலைதளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

**நகராட்சி ஆணையருக்கு உத்தரவுபோடும் குஷிமோகன்!**

இதுகுறித்து த.வெ.க. வட்டாரத்தில் கூறுகையில், “நடந்து முடிந்த தேர்தலில் விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்ட குஷிமோகன் பிரச்சாரம் எதுவும் செய்யாமல் மற்ற வேட்பாளர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு ஒதுங்கி விட்டார்.

அப்போது பெற்ற பணத்தை உடனிருந்தவர்களே வீடியோ எடுத்து தற்போது வைரலாக்கி வருகிறார்கள்” என்றனர்.

சமீபத்தில் விழுப்புரம் அம்மா உணவகத்தில் அத்துமீறி ஆய்வு என்ற பெயரில் அடாவடி செய்ததாகவும், நகராட்சி ஆணையருக்கு உத்தரவு போட்டதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

தோற்றாலும் நான் தாம்பா எம்.எல்.ஏ. என்பதைபோல் த.வெ.க. மாவட்டச் செயலாளர் அலப்பறை செய்து வருவதாக கூறப்படும் நிலையில் தற்போது தேர்தலின் போது கத்தை, கத்தையாக பணம்பெற்ற வீடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை கிழக்கு ஒன்றியம்

# இறச்சகுளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, மே 24 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், இறச்சகுளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 22.05.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் இறச்சகுளம், R.K. மஹாலில் வைத்து தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என். தல்லைசெல்வம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர் ஏ.ஆர். பூதலிங்கம், ஒன்றிய அவைத்தலைவர் சொ.சீனிவாசன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.என்.சங்கர் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், BLA2 மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தீர்மானம்: 1 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக தேர்தல் பணியாற்றிய கழகத்தினருக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தோவாளை கிழக்கு ஒன்றிய தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று ஒவ்வொரு கிளை கழகமும் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டுமென ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

# செஞ்சி தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்றது!

செஞ்சி, மே 24 –

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் அனைவரையும் வரவேற்றார். செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி பல்வேறு கருத்துக்களை கூறி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ஒன்றிய செயலாளர்கள்விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் உள்ளிட்டஒன்றிய கழக நிர்வாகிகள், தேர்தல்பணிக்குழு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

தி.மு.க.வின் பொற்கால ஆட்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் உள்ள கூட்டம் பொறாமையின் காரணமாக பல்வேறு சூழ்ச்சிகளை உருவாக்கினார்கள் அந்த சூழ்ச்சியால் தான் நாம் வெற்றி வாய்ப்பை இழந்து விட்டோம்.திமுகவின் பலம் உச்சத்தில் உள்ளது என அறிந்த பிஜேபி ஒன்றிய அரசு மூன்று முறை சர்வே எடுத்ததில் திமுக முன்னணியில் இருந்தது.தமிழ்நாட்டில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. வெற்றி பெறுவோம் என்பது நாம் மட்டுமில்லாமல் ஒன்றிய அரசும் உணர்ந்தது.

இதை உணர்ந்த பிறகு தான் 200 தொகுதிகளில்ஒன்றிய அரசு நெருக்கடி கொடுத்துஆரிய மாயை ஆரிய சூழ்ச்சியை செய்துள்ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான்குற்றம் சாட்டினார்.

மேலும் என் மூச்சு உள்ளவரை திமுக தான் எனது கொள்கை.இந்தக் கொள்கையுடன் நான் இருப்பேன் என்ற உறுதிமொழியோடு நான்மட்டும் இல்லாமல்என் மனைவி என் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என அனைவரும் இந்த இயக்கத்தில் இருப்பார்கள் இருப்பதற்கு நான் கடமை ஆற்றுவேன் என்ற உறுதிமொழி எடுத்துக்கொண்டால்தான் இந்த திமுகவை மீண்டும் நிலைநாட்ட முடியும் என அவர் உறுதிபட தெரிவித்தார்.

மேலும் எந்தவித எதிர்பார்ப்பு இல்லாமல் இரவு பகல் பாராமல் உழைப்பதற்கும், உறுதுணையாகவும், விசுவாசமாகவும் இருப்பதற்கு திமுக தொண்டர்கள் தவிர வேறு யாரும் இந்த உலகத்தில் இருக்க முடியாது எனஅவர் தெரிவித்தார்.

மேலும் இன்று 24.5.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு செஞ்சி வள்ளி அண்ணாமலைதிருமண மண்டபத்தில் கழக வழக்கறிஞர் ரவீந்திரன், மற்றும் மாநில மாணவரணி அமைப்பாளர் ஜே. வீரமணி ஆகியோர் முன்னிலையில் செஞ்சி சட்டமன்ற தொகுதி தேர்தல் முடிவுகள் குறித்த கள ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.இந்த கள ஆய்வு கூட்டத்தில் செஞ்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

**சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி - 25.05.2026**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., இ.பரந்தாமன் ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

| வ.எண். | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | நேரம் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகரம்<br>சோளிங்கர் வடக்கு<br>சோளிங்கர் கிழக்கு<br>சோளிங்கர் மேற்கு<br>சோளிங்கர் மத்திய | காலை 10,00 | MSV மஹால், சோளிங்கர் |
| 2 | காவேரிபாக்கம் தெற்கு<br>காவேரிபாக்கம் வடக்கு<br>காவேரிபாக்கம் பேரூர் | காலை 12,00 | வன்னியசத்திரம், காவேரிப்பாக்கம் |
| 3 | நெமிலி தெற்கு<br>நெமிலி வடக்கு<br>பனபாக்கம் பேரூர்<br>நெமிலி பேரூர் | மாலை 3,00 | வெங்கடேச பெருமாள் பார்ட்டி ஹால், ரெட்டிவலம் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 23.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் நடைபெற்ற செஞ்சி தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன் உள்ளனர்.

## வேலூர் செங்கல் சூளைகளில்

# த.வெ.க.வினர் மாமூல் கேட்டு மிரட்டல்!

## மாதம் ரூ.1 லட்சம் கேட்டு அட்டகாசம்!

வேலூர், மே 24 -

வேலூர் கணியம்பாடியில் செயல்படும் செங்கல் சூளைகளில் மாதம் ரூ.1 லட்சம் கேட்டு மிரட்டிய த.வெ.க. நிர்வாகிகள், தட்டி கேட்டவர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டிய வீடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக சூளை உரிமையாளர்கள் வேலூர் தாலுகா போலீசில் புகார் அளித்துள்ளனர்.

தமிழகத்தில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் ஆட்சி அமைந்த நாள் முதல் மாநிலம் முழுவதும் அந்த கட்சியின் நிர்வாகிகள் அரசு அலுவலகங்கள் மட்டுமின்றி, வழிபாட்டு தலங்கள், மருத்துவமனைகள் என பல்வேறு இடங்களில் அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் வேலூர் அடுத்த கணியம்பாடி பகுதி செங்கல்சூளைகளில் த.வெ.க. நிர்வாகிகள் மாமூல் கேட்டு மிரட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கணியம்பாடி வட்டாரத்தில் கணியம்பாடி, கணியம்பாடி புதூர், நெல்வாய், வல்லம் என பல இடங்களில் 25க்கும் மேற்பட்ட செங்கல்சூளைகள் இயங்கி வருகின்றன. வேலூர் மாவட்ட கட்டுமான பணிகளின் 40 சதவீத செங்கல் தேவையை கணியம்பாடி பகுதி செங்கல் சூளைகள் பூர்த்தி செய்கின்றன. இந்த செங்கல் சூளைகளை நம்பி 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் கணியம்பாடி ஒன்றிய த.வெ.க. செயலாளர் விஜயகுமார், நிர்வாகிகள் லோகேஷ், ஈஸ்வரன் உட்பட பலர் கார், பைக்குகளில் கணியம்பாடி புதூரில் இயங்கி வரும் சண்முகம், தினகரன், சுனில்குமார், ரமேஷ், சுமன் ஆகியோரின் செங்கல்சூளைகளில் அத்துமீறி நுழைந்தனர். தொடர்ந்து செங்கல்சூளை உரிமையாளர்களிடம், ‘நடப்பது எங்க ஆட்சி. எங்களுக்கு மாதா மாதம் ரூ.1 லட்சம் மாமூல் கொடுத்தால்தான் சூளையே நடக்கும். இல்லையென்றால் சூளைகளை இழுத்து மூடுவோம்’ என்று மிரட்டல் விடுத்து அட்டகாசத்தில் ஈடுபட்டார்களாம்.

**போலீசில் புகார்!**

இதையடுத்து செங்கல் சூளை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் திரண்டு அவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது த.வெ.க.வினர் ஆபாச வார்த்தைகளால் திட்டி மிரட்டல் விடுத்தனர். தகவல் அறிந்து அங்கு விரைந்து வந்த வேலூர் தாலுகா போலீசார், இருதரப்பையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். ஆனால் செங்கல்சூளை உரிமையாளர்கள், 3 பேர் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தாலுகா போலீசாரிடம் புகார் மனு அளித்தனர்.

இதற்கிடையில் செங்கல்சூளைகளில் தவெக நிர்வாகிகள் அத்துமீறி மாமூல் கேட்டு மிரட்டல் விடுத்த வீடியோ பதிவுகள் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் என சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக செங்கல்சூளை உரிமையாளர்கள் கூறுகையில், ‘இப்பவே இவர்களின் அராஜகம் தாங்க முடியவில்லை. இவர்களுக்கு ஓட்டு போட்டதற்கு இன்னும் என்னென்ன அனுபவிக்கணுமோ தெரியலேயே.

இதுபோன்று எங்களை மாமூல் கேட்டு யாரும் மிரட்டியதில்லை?’ என்று வேதனை தெரிவித்தனர்.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், ‘செங்கல்சூளைகள் தரப்பில் புகார் மனு அளித்துள்ளனர். யாரையும் பிடித்து வந்து எங்களிடம் ஒப்படைக்கவில்லை. இதுதொடர்பாக விசாரணை நடத்தி வருகிறோம்’ என்றனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி மற்றும் 102 - காங்கேயம் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகளை சந்தித்து கருத்துகளை கேட்பதற்கென்று தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட கழக துணை அமைப்புச் செயலாளர், வழக்கறிஞர் ப.தாயகம் கவி, கழக சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் மருது.கணேஷ், ஆகியோர் நம்முடைய திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக காலையில் கழக நிர்வாகிகளும் மாலையில் அணிகளின் நிர்வாகிகளும் பங்கேற்க வேண்டும்.

101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு தாராபுரம் ரோட்டரி மஹாலில்

102 - காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்கு காங்கேயம், பழையகோட்டை ரோடு, செந்தூர் மஹாலில்

கீழ்க்கண்ட விவரப்படி கீழ்க் காணும் நாட்களில் நேரில் வருகை தந்து கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனியாக சந்தித்து பேசி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய உள்ளனர்.

25.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி தாராபுரம் சட்டமன்றத் தொகுதி

26.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி காங்கேயம் சட்டமன்றத் தொகுதி

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 23,05,2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.